

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வானூர் சட்டமன்ற தொகுதி, கோட்டக்குப்பம் நகராட்சியில் உள்ள நியாய விலைக் கடைகளில் அரசு நிவாரண தொகை ரூ 2000 மற்றும் கழகத்தின் சார்பில் அரிசி, மளிகை பொருட்கள், புடவை, போர்வை பிரட், பிஸ்கட் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி Dr. Gautham Sigamani , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், நகர மன்றத் தலைவர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, மைதிலி ராஜேந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் உஷா. பி.கே.டி முரளி துணைத் தலைவர் ஜீனத் பீபி முபாரக், மாவட்ட மருத்துவ அணி டாக்டர்.வினோ பாரதி, மாவட்ட மீனவர் அணி மணி, மாவட்ட சிறுபான்மை அணி அன்வர் பாஷா, மீனவர் அணி துணை அமைப்பாளர் வீரப்பன், நகர மன்ற உறுப்பினர்கள் சுகுமார், நாசா, சரவணன், முகமது பாரூக், பஷீர் மற்றும் வார்டு நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



கனமழையால் பாதிக்கப்பட்ட கண்டமங்கலம் கிழக்கு ஒன்றியம் நாவம்மாள் காப்பேரியில் ஊராட்சி மன்றத் தலைவர் மணிமேகலை சின்னத்தம்பியின் ஏற்பாட்டில் ஊராட்சியில் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி பொதுமக்களுக்கு போர்வை, புடவை, கோதுமை மாவு , சேமியா உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் வே.கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, பேரூர் செயலாளர் பா ஜீவா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ், பிரவின், மாவட்ட பிரதிநிதி செந்தில், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜாத்தி , கிளைச் செயலாளர்கள் ஜெயக்குமார், நாகராஜன், ஒன்றிய மாணவர் அணி சத்தியமூர்த்தி, விளையாட்டு மேம்பாட்டு அணி கலை ராஜன், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வீர மணிகண்டன், அரவிந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### ஆற்றல்மிக்க தலைவர் – முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு அரசு

# துறைமுகங்கள் - கடல்சார் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உறுதி பூண்டுள்ளது!

## எண்ணூர் – காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழாக் கூட்டத்தில்
## பொதுப்பணிகள் – சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வாழ்த்துரை!

சென்னை, டிச.8-

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு விருந்தினராக பங்கு பெற்ற எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழா கூட்டம் நேற்று முன்தினம் (7.12.2024) சென்னை லீலா பேலஸ் அரங்கத்தில் நடைபெற்றது.



சென்னை ஹோட்டல் லீலா பேலஸ்சில் நேற்று முன்தினம் (7.12.2024) நடைபெற்ற எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழாவில் ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் 'துறைமுகங்களின் முன்னோடி' என்ற விழா மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத் தலைவர் சுனில் பாலிவால், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் ஜி.விஸ்வநாதன், காமராஜர் துறைமுக நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திருமதி ஜே.பி. ஐரின் சிந்தியா, திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரெமையா, ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல், ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

விழாவில் பங்குபெற்ற ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத் தலைவர் சுனில் பாலிவால், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் ஜி.விஸ்வநாதன், காமராஜர் துறைமுக நிறுவன மேலாண் இயக்குநர் திருமதி ஜெ.பி.ஐரின் சிந்தியா, திரைப்பட நடிகை ஆண்ட்ரியா ஜெரெமையா, ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பள்ளிக்கல் மற்றும் ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் அனைவரையும் வரவேற்று தனது உரையைத் தொடங்கினார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றுகையில், எண்ணூர் காமராஜர் துறை முகத்தின் வெள்ளிவிழாவில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்து, அக்டோபர் 1999இல், எண்ணூர் துறைமுகம் அதாவது காமராஜர் துறைமுகம் இந்தியாவின் 12வது பெரிய துறைமுகமாக அறிவிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார்.

பெரிய துறைமுகமாகிய சென்னை துறைமுகத்தின் நெரிசலைக் குறைக்கவும், சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், நமது மதிப்பிற்குரிய தலைவர் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தி சென்னையின் வடக்கே துறைமுக வளர்ச்சிக்கு தேவையான நிலம் தமிழக அரசால் கையகப்படுத்தப் பட்டு துறைமுகத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு மற்றும் அப்போதைய மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன் மற்றும் டி.ஆர்.பாலு ஆகியோரின் தொடர்ச்சியான ஆதரவுடன், துறைமுகம் 2001 ஆண்டு பிப்ரவரி1 அன்று செயல்படத் தொடங்கி, அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் துறைமுகம் கடந்த 25 ஆண்டுகளாக சாலை, இரயில் இணைப்புகளுடன் மாநில அரசின் ஆதரவுடன் அதன் செயல்பாடுகள் வெற்றிகரமாக இருப்பதைக் குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், இத்துறைமுகம் பொன்விழா கொண்டாடும் வகையில் வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்த துறைமுகம் அமைந்துள்ள காட்டுப்பள்ளி முதல், கல்கத்தா சாலை, பெங்களூர் சாலை, திருச்சி சாலை கடந்து மாமல்லபுரம் வரை அதாவது, கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் வகையில் சென்னை வெளி வட்ட எல்லைச் சாலை (CPRR) அமைக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

134 கி.மீ. நீளத்தில் ரூ.16, 212 கோடி மதிப்பீட்டில் சாலை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியை முதலமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்தி விரைவாக முடிக்க அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இச்சாலை பணிகள் முடிவுற்றவுடன், இத்துறைமுகம் தமிழகத்தின் பிற பகுதிகள் மற்றும் அண்டை மாநிலங்களுடன் கூடுதல் இணைப்பைப் பெற்று வெற்றிகரமாகச் செயல்படும்.

2023-2024 ஆம் ஆண்டில் சுமார் 45 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்ட காமராஜர் துறைமுகத்தின் அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களைப் பாராட்டிய அமைச்சர் அவர்கள், ஆற்றல் மிக்க தலைவர், தமிழ்நாட்டின் முதல மைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு, துறைமுகங்கள் மற்றும் கடல்சார் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளது என்றும், எண்ணூர் காமராஜர் துறைமுகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதாக தெரிவித்தார்.

மேலும், இந்த மிக முக்கியமான நிகழ்ச்சிக்கு அழைத்ததற்காக மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தனிமரம் தோப்பாகாது, அனைத்து மரங்களும் ஒன்று சேர்ந்தால்தான் தோப்பாகும் இதைப் போல இத்துறைமுக வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது பழமொழி, இதற்கேற்ப இத்துறைமுக வளர்ச்சி பெற்று இருந்தால் தான் பலநாடுகளுக்கும் சென்று பொருள் ஈட்ட முடியும் என்பதைக் குறிப்பிட்டு, இத்துறைமுகம் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த 25 ஆண்டுகளாகவும், எதிர்காலத்திலும் இந்தத் துறைமுகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்காக பாடுபட்ட ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவன தலைவர், காமராஜர் துறைமுக நிறுவன மேலாண் இயக்குநர், காமராஜர் துறைமுக நிறுவன துணை தலைவர் மற்றும் ஒட்டுமொத்த குழுவையும் வாழ்த்தி உரையை நிறைவு செய்தார்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திருவாரூர் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவருமான சித்தமல்லி நா. சோமசுந்தரம் அவர்களின் இரண்டாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நீடாமங்கலத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ் செல்வன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழக உடன் பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர அமைப்பாளர் அ.வெங்கடேஷ் ஏற்பாட்டில் கும்பகோணம் புனித சம்மனசு இல்லத்தில் உள்ள ஆதரவற்றோருக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் ஆகியோர் வழங்கினர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எம்.சிவானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.

### முனைவர், முது முனைவர் ஆகிய பட்ட மேற்படிப்பு ஆய்வுக் கட்டுரை

# தமிழ் மொழியிலேயே சமர்பிக்க நடவடிக்கை!

## உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

தஞ்சாவூர், டிச. 9 -

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றிய பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தில் சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் சமுதாயகூடம் திறப்பு, காவனூர் ஊராட்சியில் பள்ளிக் கட்டிடம் திறப்பு விழா, சரபோஜிராஜபுரம் ஊராட்சியில் பேருந்து தடம் நீட்டிப்பு துவக்கம், ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா, மரந்துரை ஊராட்சியில்ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா, நெய்க்குப்பை ஊராட்சியல் நேரடி கொள்முதல் நிலையம் திறப்பு, திரு மங்கைச்சேரி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு, செருக்குடி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு, ஆரலூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் திறப்பு விழா, திருலோகி ஊராட்சியில் பொது விநியோக அங்காடி திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழச்சியில் கலந்துகொண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

கல்லூரிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. உயர்கல்விக்கு மாவட்ட அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை என்ற செய்தி பரவலான கருத்தாக இருக்கலாமே தவிர, அந்தந்த பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் அனைத்திற்கும் உரிய தொகை உரிய தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது. கல்லூரி முதல்வர் மற்றும் மண்டல இணை இயக்குனர்கள் இருக்கிறார்கள் அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. உயர்கல்விக்கு தேவையான நிதிகள் ஒதுக்கி தரப்படுகிறது. நீண்ட நாட்களாக முதல்வர் பணியிடம் காலியாக இருந்த கும்பகோணம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் முதல்வர் பணியிடத்தை நிரப்பியது என அடுக்கடுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகிறது. கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக்கல்லூரியில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் கோரிக்கையை ஏற்று ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கழிவறை வசதிகளை மேம்படுத்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் கூடுதலாக கல்லூரிகளை திறப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முது கலை பட்டம், இளம் முனைவர், முனைவர் பட்டம் போன்றவை பல்கலைக்கழகங்களில் பெற ஆய்வு கட்டுரைகளை தமிழ் துறையை தவிர ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என இருந்தாலும், மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஆய்வு



களை தமிழில் மேற்கொள்ளலாம் என கேட்டால் பல்கலைக்கழக நிர்வாகம், கல்லூரி நிர்வாகம் அனுமதி வழங்குகிறது. அதன் அடிப்படையில் தமிழுக்கு முன்னுரிமை தருபவரே நமது முதல்வர், ஆகவே மாணவர்களின் கோரிக்கை ஆங்கில ஆய்வு இல்லாமல் தமிழில் என்று கேட்டால், அதற்கான அனுமதியையும் உயர்கல்வித் துறை மூலமாக பல்கலைக்கழகம், கல்லூரிகள் வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதல மைச்சரின் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் வழிக்காட்டுதலின்படியும், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சரபோஜராஜபுரம் ஊராட்சி, வேட்டமங்கலம் கிராமத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைக்கு ஏற்ப கும்பகோணத்திலிருந்து கோணுலாம்பள்ளம் இயக்கப்படும் நகர பேருந்தினை காமாட்சிபுரம் வழியாக வேட்டமங்கலம் வரை நீட்டிப்பு செய்த புதிய வழித்தட பேருந்தினை அமைச்சர் கோவி.செழியன் துவக்கி வைத்து பேசியதாவது,

வேட்டமங்கலம் கிராமத்திற்கு வெள்ளைக்காரன் ஆட்சி காலத்திலிருந்து பேருந்து வசதி இல்லை என்று கோரிக்கை வைத்ததையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, போக்குவரத்துத் துறை அமைச்சர் துரிதமாக நடவடிக்கை எடுத்து இன்று இப்பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள கோணுலாம்பள்ளம் கிராமம் வரை வந்து செல்கின்ற தடம் எண்.A34A பேருந்தினை பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி காலை, மாலை என மூன்று முறை வந்து செல்லக்கூடிய அளவிற்கு தடநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள் கேட்கின்ற அனைத்து உதவிகளையும் உடனுக்குடன் நிறைவேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் உத்தர விட்டுள்ளார். திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமத்திற்கும் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. பேருந்து சேவையினை பாராட்டி இன்று வேட்டமங்கலம் கிராம மக்கள் அனைவரும் திரண்டு அளித்த வரவேற்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். எந்த கோரிக்கையாக இருந்தாலும் உடனுக்குடன் நிறைவேற்றவும் அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது பாராட்டுக்குரியது. அரசின் திட்டங்களை பெறுகின்ற பொது மக்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசிற்கு நல்ஆதரவு வழங்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம்.பியுமான செ. இராமலிங்கம், திருப்ப னந்தாள் ஒன்றிய குழு தலைவர் தேவி இரவிச்சந்திரன், துணைத்தலைவர் கோ.க. அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் மிசா என். மனோகரன், இர.உத யச்சந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பாலகுரு, இளவரசி, கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர் பொன் முடி, பொது மேலாளர் கும்பகோணம் மண்டலம் ரீதரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகணேஷ், கோவி. ஆசைத்தம்பி, சுவாமி நாதன், கிளை மேலாளர் சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர் இராமசந்திரன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் வடகரையில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் ஏற்பாட்டில் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றியம் அரங்கக்குடி, வடகரை ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு காசோலையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வழங்கினர். உடன் பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத், ஒன்றிய கழக செயலாளர்கள் எம். அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் கடலூர் அடுத்த பெரிய கங்காணங்குப்பத்தில் நடைபெற்றது. மருத்துவ முகாமை கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். டாக்டர் பிரவீன் அய்யப்பன் முன்னிலை வகித்தார். இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். பின்னர் அவர்களுக்கு மருந்து, மாத்திரை வழங்கப்பட்டது. முகாமில் காசநோய் பிரிவு துணை இயக்குனர் டாக்டர் கருணாகரன், கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மாறன், கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் ஜெயா சம்பத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், லட்சுமணன், துரை, ரோட்டரி சங்க முன்னாள் ஆளுநர் பிறையோன் , உதவி ஆளுநர் வெங்கடேசன், தலைவர் நாராயணசாமி, பொருளாளர் ஞானசேகரன், முன்னாள் துணை ஆளுநர் வேல்முருகன், முன்னாள் தலைவர்கள் செல்வராஜ், சன் பிரைட் பிரகாஷ், இளங்கோ, சதீஷ், உமாபதி, ராஜேஷ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.